தபால்
3 - ஜூலை 2009

- 3 JUL 2009
Chennai 600 002
Public Service Comm

சுருக்கம்
**060277**

பொதுப் பணிகள் – தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட இந்திய இசையில் ஆசிரியர் பயிற்சிச் சான்று (T.T.C in Indian Music) பாடத்தை பள்ளிக் கல்வித் துறை இசையாசிரியர் பதவிக்கு இணையானது என அங்கீகரித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (எம்1) துறை

அரசாணை (நிலை ) எண். 144,

நாள் 26.06.2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
ஆனி –12

படிக்கப்பட்டவை:

தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் செயலாளர் (பொறுப்பு) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.6013/வி.ம.அ.து.ஊ1/2001, நாள் 28.4.2009.

-----

திரு.எஸ். சீனிவாசன் என்பவர் சேலத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் நடந்த இசையாசிரியர் பதவிக்கான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு பெற்றார் என்றும், ஆனால் இவருடைய கல்வித் தகுதியான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட இந்திய இசையில் ஆசிரியர் பயிற்சிச் சான்று (T.T.C in Indian Music) இப்பதவிக்குத் தகுதியானதாக இல்லை என்று இவரது நியமனம் தடை செய்யப்பட்டுள்ளது என அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளதாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குறிப்பிட்டுள்ளது. இப்பொருள் குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இந்திய இசையில் ஆசிரியர் பயிற்சிச் சான்று (T.T.C in Indian Music) பாடத்தை பள்ளிக் கல்வித் துறையில் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு இணையாக கருதிப், பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் (Recommended) என 22.4.2009 அன்று நடைபெற்ற இணைக்கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுக்கூட்டத்தில், தீர்மான எண்.5–ல் விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது:–

| | |
|---|---|
| தீர்மான எண்: 5 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இந்திய இசையில் ஆசிரியர் பயிற்சிச் சான்று (T.T.C in Indian Music) பாடத்தை பள்ளிக் கல்வித் துறையில் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக கருதிப் பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம். | பரிந்துரைக்கப்படுகிறது |

3. தமிழ்நாடு இணைக் கல்வித் தகுதிப் பரிசீலிப்பு குழுவின் பரிந்துரையினை அரசு பரிசீலித்தப் பின் அதனை ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. பரிசீலனைக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, அண்ணாமலைப் பல்கலைகழகத்தினால் வழங்கப்படும், இந்திய இசையில் ஆசிரியர் பயிற்சிச் சான்று (T.T.C in Indian Music) பாடத்தை பள்ளிக் கல்வித் துறையில் இசை ஆசிரியர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு

இணையானது என அரசு ஆணையிடுகிறது இது குறித்து தமிழ் நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணிக்கான சிறப்பு/தற்காலிக விதிகளுக்கு ஏதேனும் திருத்தம் வெளியிட வேண்டியிருப்பின், உரிய கருத்துருவை உடன் அனுப்பமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் செயலாளர் (பொறுப்பு)
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–2.
பதிவாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர், சிதம்பரம்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (எம்)
சென்னை–9.(இ)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.